



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பொழிச்சலூர் தாங்கல் ஏரியை நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கரைகளை பலப்படுத்தி பொதுமக்கள் நடக்க நடைபாதைகள் அமைத்து அழகு படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன பணிகளை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி பார்வையிட்டு ஆய்வு செய்தார். நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நடைபெறும் பணிகளை த.வே.க. எம்.எல்.ஏ. தொண்டு நிறுவனம் மூலம் நடைபெறும் பணி என்று பொய்யான தகவல் பரப்பட்டுள்ளது. மின்விளக்குகள் தடுப்பு வேலிகள் அமைக்க கூடுதல் நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் கோரிக்கை வைத்து பெற்று பணிகள் தொடர ஏற்பாடு செய்யப்பட உள்ளது. நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப், செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.





முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின், 103 பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு,சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121அ வட்ட தி.மு.கழகத்தின் சார்பில், வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம்.சி. முன்னிலையில், மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு, கழக கொடி ஏற்றி 1500 பேருக்கு இனிப்புகளையும், அறுசுவை உணவுகளையும், வழங்கினார்.

### அ.குப்பன் தலைமை! வினோத் வேலாயுதம் முன்னிலையில்

## ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் சமபந்தி விருந்து!

### நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி, அன்பகம் கலை, மரு.எழிலன் பங்கேற்பு!

சென்னை ஜூன் 9–

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சி நாளை 10.6. 2026 புதன்கிழமை மதியம் 12 மணி அளவில் மேற்கு நமச்சிவாயபுரம், சூளைமேடில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலை வகிக்கிறார். அ. குப்பன் தலைமை ஏற்கிறார்.

கா.சிட்டிபாபு, சு சண்முகம், ஜி. இளங்கோ, எம் தியாகராஜன், ஆர். முனிரத்தினம், ஆர்.சி. தாமஸ் ரைட், எம் அண்ணாமலை, திருவை ஆர். கோபி, எஸ்.கே.பழனி, டி பாலன், ஆர்.ஆதில் அகமது, ஆர்.எம். உமா தேவி, வி.தீபா, பா. ஜெயராணி, எஸ். மேட்லின் மேரி, கே கனகா, பா.ஜீவா, எஸ். ஜீவரத்தினம், விஜயா பாபுஜி ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் பெருநகர மாநகராட்சி பணிக்குழு தலைவர் நே.சிற்றரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் சமபந்தி விருந்து வழங்கி உரையாற்றுகின்றனர்.

இதில் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, நுங்கை வி.எஸ். ராஜ், டி.ஜோஸ் டேனியல், எம்.டி.ஆர். நாதன், ப.பிரகாஷ், துபாய் விஜய், யோகேஸ்வரி சுந்தரேசன், மு.சீனிவாசன், ஜி.வி. சரவணன், டாக்டர் ஜீவகன் அய்யநாதன், எம்.டி.ஆர். சாரதி மணிமாறன், ச. அசோக்குமார், டி.எஸ்.ராஜா, திருமலை பொண்ணுரங்கம் MC, ரெட்சன் சி.அம்பிகாபதி, லதா பிளாரன்ஸ், எலிசபெத் அகஸ்டின், MC புவி பாலாஜி, இதயத்பாஷா, ஸ்டர்லிங் மோகன், பா. கமலக்கண்ணன், ஆர்.பொன்னம்மாள், வா. கணேசன், வரதை த.பரி, ச.டேவிட் இன்பராஜ், மு.மோகன், த.குணசேகரன், தினேஷ்பிரபு என்.மோகனவேல், கே. குட்டி, இம்ரான், வழக்கறிஞர்.கே. வெங்கடேஷன், ஜெ. இருதயநாதன், ஜஸ்டின், பிரசன்னா, கமலக்கண்ணன், Dr.ஆ.திரு முருகன், க. தங்கமணி, ஆரோன் பிலிக்ஸ், K.L.M. மணி, D.செல்வி கோ. தட்சிணாமூர்த்தி, என்.இ.சரவணன், பா.சுரேஷ், ஆர். சீனிவாசன், எம்.டி. ஆர்.புகழ், வி.என்.பாபு, த. ஜசன்ட், எஸ். பார்த்திபன் வி.வேல்குமார், எஸ். அருண்குமார், ப. ஜெயந்தி, செ.பா.ஜான்சன், ஐ.ராஜதுரை, வெ.சுரேஷ், காந்தி (எ) ரா.ராஜேஷ், சீ.தனுஷ்கோடி ஆதித்தன், மு.லோகநாதன், முரசொலி ஆர். ஸ்ரீதர், ஆர்.பா. ராம்குமார் முகவை மு.நடராஜன், பால்சுதாகர், கஜலெட்சுமி, பத்மநாபன், ரஞ்சித், பவானி, சித்ரா, லதா பிரசன்னா, டெல்பினா 109 வது வட்ட கழக நிர்வாகிகள் பாஷாகுமார், ஏ.வெங்கடேசன், ச.ராசுக்குமார், ஜி.ஆர்.மூர்த்தி, ஆரோக்கியதாஸ், ஆட்டோ ஏழுமலை, பழனி, மதியழகன், தம்பிதுரை, சுகுமார்பாஸ்கர், வே. வெங்கடேசன், கந்தன், முனியாண்டி, டேவிட், மாரிமுத்து 109 அ வட்ட கழக நிர்வாகிகள் இரா.முத்துகுமார், விஜயகுமார், ராஜா, மாலா, வாஞ்சிநாதன், கோவிந்தராஜன், நீலகண்டன், சேகர், சு.நைனியப்பன், சுப்பிரமணியன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர். எஸ்.செல்வகுமார், ஆர்.பாலாஜி ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

## எது பழமையானது? சிந்து சமவெளி நாகரிகமா? - தமிழர் நாகரிகமா?

### ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, ஜூன் 9–

ஒன்றிய அரசாங்கம் தொன்மை நாகரிகம் குறித்து இருவேறு கருத்துகள் வந்துள்ள நிலையில் எது பழமையானது சிந்து சமவெளி நாகரிகமா? தமிழர் நாகரிகமா? என்பது குறித்து ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழங்காலத்தில் சிறந்த நாகரிகங்கள் என்ற பட்டியலில் எகிப்து நாட்டு நாகரிகம் முதல் இடத்தில் வைக்கப்பட்டு இருந்தது. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அங்கு பிரமிடுகள், கோவில்கள், மலையை குடைந்து மிகப்பெரிய கல்லறைகள் போன்றவை பிரமாண்ட அளவில் கட்டப்பட்டுள்ளன. அவை யனைத்தும் இன்றும் அதேநிலையில் இருக்கின்றன என்பதே இந்த அந்தஸ்துக்கு காரணம் அதுபோல இந்தியாவில் உள்ள சிந்துசமவெளி நாகரிகமும் பழங்காலத்திய சிறந்த நாகரிகமாக போற்றப்பட்டு வரு கிறது.

இதற்கு காரணம் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வாழ்ந்த மக்கள் அழகிய வீடுகள், தெருக்கள், கழிவறை கால்வாய்கள், குளிக்கும் இடங்கள் போன்றவற்றை அமைத்து நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றாதாரங்கள் அவர்கள் கட்டிய அந்த அமைப்புகளின் எச்சங்களாக இன்றும் காணப்படுகின்றன. இதனால் சிந்துசமவெளி நாகரிகமும் போற்றப்படுகிறது.

எகிப்து நாகரிகத்துக்கும், சிந்து சமவெளி நாகரிகத்துக்கும் முந்தையது தமிழர்களின் நாகரிகம் என்று ஆண்டாண்டுகாலமாக தமிழ்சமுதாயம் உரக்கச்சொல்லி வந்தாலும், அதை நிரூபிப்பதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் அதனை உலகஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த பெருங்குறையை மதுரையையொட்டிய சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் நடந்த தொல்லியல் ஆய்வுகள் தீர்த்துவைத்தது மட்டுமல்ல, தமிழர் நாகரிகம் மிகவும் பழமையானது என்று பறைசாற்றியது. அப்போது தென்னிந்திய தொல்பொருள் இலாகாவின் கண்காணிப்பாளராக இருந்த கே.அமர்நாத் ராமகிருஷ்ணன் குழுவினர் கீழடியை சல்லடைப் போட்டு ஆராய்ந்து தமிழர் நாகரிகத்தை, வரலாற்றில் தேடும்பணியில் முழுமூச்சாக இறங்கினார்கள். மதுரை மண்ணின் சொந்தக்காரரான கே.அமர்நாத் ராமகிருஷ்ணனுடன், துணை கண்காணிப்பாளரான திரு நெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ராஜேஷ், சேலம் மாவட்டத்தைச்சேர்ந்த என்.வீரராகவன் ஆகியோர் கொண்ட குழுவினர் 102 குழிகளைத்தோண்டி ஆய்வுநடத்தி, அந்த காலத்து தமிழர்கள் பயன்படுத்திய 5,800 தொல்பொருட்களை கண்டெடுத்தனர். அங்கு காணப்பட்ட அமைப்புகள் சுமார் 2,800 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிக மிக்க மக்களைக்கொண்ட ஒரு நகரம் இருந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்தியது.


தலையங்கம்
தினத்தந்தி
8.6.2026
கீழடி தமிழர் நாகரிக வயதை குறைப்பதா?

இந்த ஆய்வுகளை 982 பக்கங்களில் தயார்செய்து அமர்நாத் ராமகிருஷ்ணன் 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய தொல்பொருள் இலாகாவிடம் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையை தொல்பொருள் இலாகா வெளியிடவுமில்லை. மாறாக கீழடிகாலத்தை சிந்துசமவெளி நாகரிக காலத்தைவிட குறைவாக இருக்கும்வகையில் அதாவது, 500 ஆண்டுகளை குறைத்துக் காட்டச் சொல்லி அமர்நாத் ராமகிருஷ்ணனுக்கு மத்தியஅரசாங்கம் அழுத்தம் கொடுத்தது. அதை அவர் ஏற்கமறுத்ததால் உடனடியாக நொய்டாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இப்போது தேசிய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருட்கள் குழுமத்தின் இயக்குனராக இருக்கும் அமர்நாத் ராமகிருஷ்ணனிடம், இப்போதும் உங்கள் அறிக்கையை மாற்றம்செய்து அனுப்புங்கள் என்று தொடர்ந்து ஒன்றியஅரசு வலியுறுத்துகிறது. ஆனால் அவர் இதற்கு உறுதியாக மறுப்பு தெரிவித்ததோடு, ”எனது மனசாட்சிப்படி உண்மையான ஆய்வு களின் அடிப்படையில் என் ஆய்வுகளை சமர்ப்பித்துள்ளேன். எனது அகழாய்வில் கண்டுபிடித்த சான்றுகளின் அடிப்படையிலும், எது உண்மையோ?, எது நிரூபிக்கப்படுகிறதோ? அதை பின்பற்றித்தான் எனது அறிக்கையை தாக்கல்செய்துள் ளேன்.

எனவே இதை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை’ என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். மேலும் இதுகுறித்து இந்தியதொல்பொருள் ஆய்வுநிறுவனத்தின் உள்குழு அறிக்கைக்கேற்ப அறிக்கையில் மாறுதல்களை செய்வோம் என்று அமர்நாத் ராமகிருஷ்ணனிடமும் கேட்டுக்கொள்ளப்பட்டும் இருக்கிறது. இப்போது ஒன்றிய அரசாங்கம் இந்த தொன்மை நாகரிகம் குறித்து இருவேறு கருத்துகள் வந்துள்ள நிலையில் எது பழமையானது? சிந்துசம வெளி நாகரிகமா? தமிழர் நாகரிகமா? என்பதை வரலாற்று சான்றுகள், விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளை கொண்டு எது சரியான பதிவு என்பதை வெளிப்படைத்தன்மையோடு சமுதாயத்துக்கு தெரிவிக்கவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### எஸ். சிவகுமார் தலைமையில் கே. கருணாகரன் முன்னிலையில்

## மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா - அறுசுவை உணவு!

### புழல் எம். நாராயணன் வழங்கினார்!

சென்னை, ஜூன்.9-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு அறுசுவை காலை உணவு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17 ஆவது வட்டம் வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார் தலைமையில், 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி, பேரறிஞர் அண்ணாவின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு காலை அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

17 வது வட்ட நிர்வாகிகள் எஸ். பாலாஜி, சி.மூர்த்தி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என், அஜய் தென்னவன், பாக முகவர்கள் டி. திவாகர், எம. மைக்கேல் என்கின்ற மோகன் ராஜ், வி. சுமீர், ஜி.கார்த்திக், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்ரியன், டி. வினோத், எஸ். நாகராஜ்,கே. ராஜ்குமார், பி எம் பாக்கம் எம். ஜான்சன், ஜி. பூபாலன், சுதர்சன், வடபெரும்பாக்கம் இ. கார்த்திக், பி. செந்தில், எம். கோவிந்தன், விநாயகபுரம் கமலநாதன், சின்னத்தோப்பு முனிவேல், 17வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் வக்கீல் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் ஏறையமங்கலம் கிராமத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் மோ. ரமேஷ்ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு இனிப்புகள் வழங்கினார்கள். உடன் கோபால், ரவி, கீதா முனுசாமி, தினேஷ், நீலாவதி, ராஜேந்திரன், ராஜா, தமிழ் மொழி, சண்முகம், செல்வம், சரவணன், பிரசன்னா குமார், தட்சிணாமூர்த்தி, சதாசிவம், மணிகண்டன், டேவிட் பிரபாகரன், பரிமளா சிவகுமார், மணி, உதயா, முரளி, வள்ளி, மகாலட்சுமி முருகேசன், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.





சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் சை.மு. சேகர் தலைமையில், மாநில துணை செயலாளர் எம்.எஸ். ஹரிபாபு, பகுதி அவைத் தலைவர். டி.என்.சிவமணி ஆகியோர் முன்னிலையில் இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், வெ.புருசோத்தமன் ஆகியோர் வரவேற்புரையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., தலைமை பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஆகியோர் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினர்.

### மறைந்த தீரர் ஜெ.அன்பழகன்

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி அமைதிப் பேரணி!

### பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு.மணி அறிக்கை!

சென்னை, ஜூன்.9–

சென்னை மேற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த மாவீரன் ஜெ.அன்பழகன் 6ம்ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி 10.06.26 காலை 7.00 மணி அளவில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தலைமையில் தியாகராயர் நகர் மனமகிள் மன்றத்திலிருந்து புறப்பட்டு மாவீரன் தீரர் ஜெ .அன்பழகன் நினைவிடத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு மற்றும் கழகம் தோழர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்துகிறார்கள்.

எனவே இந்த அமைதி பேரணிக்கு மாநில மாவட்ட நிர்வாகிகள் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் வட்டகழக செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகமூத்த முன்னோடிகள் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி கேட்டுக்கொள்கிறார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் காக்களூர் ஊராட்சியில் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் முன்னாள் எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் ஆலோசனைப்படி ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து 500 நபர்களுக்கு பிரியாணி வழங்கினார். உடன் நிர்வாகிகள் த.எத்திராஜ், கே.கே.சொக்கலிங்கம், டி.கே.சீனிவாசன், சௌந்தரராஜன், ஆர்.பிரபு, வே.தியாகராஜன், சதீஷ், சக்திவேல், டி.கே.பூவண்ணன், சங்கர், கிருஷ்ணன், செந்தில், சத்தியமூர்த்தி, ஜெயபால், மீராசா, கதிர்வேல், கருணாகரன், விக்கி, மேகநாதன், சரண் சுனில், சந்தோஷ்குமார், ஜெயசூர்யா, கோபால், மகிமை தாஸ், தட்சிணாமூர்த்தி, கோவிந்தராஜன், உள்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இ.குப்பன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா:

## திருவள்ளூர் - தொடக்கப் பள்ளியில் நலஉதவிகள்!

### நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூன் 09–

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருவள்ளூர் நகரம் பெரிய எடப்பாளையம் நகராட்சி ஆரம்பப் பள்ளியில் மாணவர்களின் கல்வி மற்றும் நலன் கருதி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் அவர்களின் ஆலோசனையின்படியும், முன்னாள் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மாவட்ட பிரதிநிதி இ. குப்பன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் திருவள்ளூர் நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற துணைத் தலைவருமான சி.சு. ரவிச்சந்திரன் பள்ளிக்கு தேவையான உணவு வழங்கும் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாய்கள், நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களையும், மாணவர்களுக்கு அறுசுவை பிரியாணி மற்றும் இனிப்புகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகர துணைச் செயலாளர் ராஜேஸ்வரி கைலாசம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா. புவனேஷ்குமார், கிளைச் செயலாளர் இ. கோடீஸ்வரன், நகரப் பிரதிநிதி அழகிரி, வசந்த், முரளி, பிரசாந்த் சூர்யா, ராஜா, நாகேந்திரன், கணேஷ், தினேஷ், சதீஷ் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி 77வது வட்டச் செயலாளர் தி.தயாளன் தலைமையில் பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.கௌரிசங்கர் முன்னிலையில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி, மாநில செய்திதொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கழகக் கொடி ஏற்றி, கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகள் உணவு வழங்கினார்கள். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.